<u>முதல் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>

முன்னிலை - திருமதி.எஸ்.எழில், எம்.எல்.,

முதல் கூடுதல் மாவட்ட நீதிபதி,

2026 ம் வருடம் மார்ச் மாதம் 02 ம்நாள் திங்கட்கிழமை

(திருவள்ளுவராண்டு 2057-ஸ்ரீ விசுவாவசு வருடம்-மாசி திங்கள் 18 ம்நாள்)

<u>இடைநிலை மனு எண்கள்.12, 13/2026</u>
அசல் வழக்கு எண்.174/2012

<u>இ.ம.எண்.12/2026</u>
அ.வ.எண்.174/2012

சுப்புலட்சுமி .. மனுதாரர் / வாதி

// எதிர் //

1. நாச்சிமுத்துகவுண்டர் (எ) நாச்சியப்பன் (இறந்துவிட்டார்)
2. இராமாயம்மாள் (எ) அம்மணியம்மாள்
3. சண்முகம்
4. செந்தில்குமார்
5. குழந்தைசாமி கவுண்டர்
6. தங்கமுத்துகவுண்டர்
7. மாலதிதேவி
8. ஜெகநாதன்
9. மலர்விழி
10. ஜெகதீஸ்
11. மல்லிகா
12. வளர்மதி
13. சுமதி
14. ஜோதி

.. எதிர்மனுதாரர்கள் /வாதிகள்

19.02.2026 ம் தேதியிட்ட இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 18, விதி 17 மற்றும் பிரிவு 151 ன்படி மனுதாரர்/ வாதியால் தாக்கல் செய்யப்பட்டு, பி.வா.சா.2 ஐ தனது தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டியுள்ளதால் பி.வா.சா.2 ஐ மீண்டும் அழைக்க வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

<u>இ.ம.எண்.13/2026</u>

அ.வ.எண்.174/2012

சுப்புலட்சுமி .. மனுதாரர் / வாதி

// எதிர் //

1. நாச்சிமுத்துகவுண்டர் (எ) நாச்சியப்பன் (இறந்துவிட்டார்)
2. இராமாயம்மாள் (எ) அம்மணியம்மாள் (இறந்துவிட்டார்)
3. சண்முகம்
4. செந்தில்குமார்
5. குழந்தைசாமி கவுண்டர்
6. தங்கமுத்துகவுண்டர்(இறந்துவிட்டார்)
7. மாலதிதேவி
8. ஜெகநாதன்
9. மலர்விழி
10. ஜெகதீஸ்
11. மல்லிகா
12. வளர்மதி
13. சுமதி
14. ஜோதி

.. எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள்

19.02.2026ம் தேதியிட்ட இம்மனு உ.வி.மு.ச. பிரிவு 151ன்படி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டு, பி.வா.சா.2ஐ தனது குறுக்கு விசாரணை செய்ய வேண்டியிருப்பதால் முடிக்கப்பட்ட பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்தை மறுதிறப்பு செய்ய உத்தரவிடக் கோரப்பட்டுள்ளது.

மேற்படி இரு மனுக்களும் இந்நீதிமன்றத்தின் முன்பாக 02.03.2026ம் தேதி ஒருசேர இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இரு மனுக்களிலும் மனுதாரர் தரப்பில் திரு.கே.முபாரக் பாட்ஷா, வழக்கறிஞர் அவர்களும், 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.எல்.எஸ்.முருகேசன், வழக்கறிஞர் அவர்களும், 7ம் எதிர்மனுதாரர் தரப்பில் திரு.வி.பி.சங்கர் குமார், வழக்கறிஞர் அவர்களும், 8 மற்றும் 9ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.பி.பி.துரைசாமி, வழக்கறிஞர் அவர்களும் ஆஜராகியும், 5, 10 முதல் 14 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கிலேயே தோன்றா தரப்பினர்களாக்கப்பட்டும், 1, 2 மற்றும் 6ம் எதிர்மனுதாரர்கள் இறந்துவிட்ட நிலையிலும், இருதரப்பு

வாதுரைகளை ஒரு சேரக் கேட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து, மனு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

<u>பொது உத்தரவு</u>

பிரதிவாதிகள் தரப்பில் முடிக்கப்பட்ட வழக்கை மறுதிறப்பு செய்யவும், பி.வா.சா.2 ஐ மனுதாரர்/வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டியுள்ளதால் பி.வா.சா.2 ஐ மீண்டும் அழைக்க வேண்டுமென்று கோரி மனுதாரரால் இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மேற்படி இரு மனுக்களிலும் மனு பிரமாணப் பத்திரங்களின் சுருக்கம்:</u>

மனுதாரர் மேற்படி அசல் வழக்கில் வாதி ஆவார். எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் மீது பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். கடந்த 20.01.2026 ம் தேதியன்று மனுதாரர் / வாதி தரப்பில் பி.வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போடபப்பட்டிருந்தது. அன்றைய தினம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் அவர் நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை. அன்றைய தினம் தனது வழக்கறிஞர் வேறு நீதிமன்றத்தில் இருந்த காரணத்தினால் பி.வா.சா.2 ஐ விசாரணை செய்ய இயலவில்லை. மேற்படி பி.வா.சா.2 ஐ தனது தரப்பில் குறுக்கு விசாரணை செய்யாத காரணத்தினாலும், மனுதாரர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகாத காரணத்தினாலும் மேற்படி சாட்சி விசாரணை முடிக்கப்பட்டது. ஆகவே பி.வா.சா.2 ஐ மனுதாரர் / வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டியுள்ளதால், முடிக்கப்பட்ட பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்தை மறுதிறப்பு செய்து, பி.வா.சா.2 ஐ திரும்ப அழைக்க வேண்டுமென்று சொல்லப்பட்டு இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>மேற்படி இரு மனுக்களிலும் 4 ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-</u>

இந்த மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரரால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள சங்கதிகளைத் தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். இந்த எதிர்மனுதாரர் தரப்பில் சொல்லப்படுவது

யாதெனில், மேற்படி வழக்கில் கடந்த 19.11.2025 ம் தேதியன்று பி.வா.சா.2 முதல் விசாரணை செய்யப்பட்டு கடந்த 24.11.2025 ம் தேதியன்று குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டது. மீண்டும் கடந்த 25.11.2025 ம் தேதியன்று வாதி தரப்பில் 02.12.2025 ம் தேதியன்று வாய்தா போடப்பட்டு அன்றைய தினம் பகுதியாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டது. மீண்டும் பி.வா.சா.2 ஐ வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய 03.01.2026, 20.01.2026 அன்று வாய்தா போடப்பட்டது. கடந்த 20.01.2026 ம் தேதியன்று வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் குறுக்கு விசாரணை இல்லை என பி.வா.சா.2 விசாரணை முடிக்கப்பட்டது.இந்த வழக்கில் இந்த எதிர்மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய பரிகாரம் கிடைக்கக்கூடாது என்பதற்காக பொய்யான காரணங்கள் கூறி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் வேண்டுமென்றே வழக்கை காலதாமதம் செய்யும் எண்ணத்துடன் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். அதனால் மனுவில் கோரியுள்ள பரிகாரங்கள் எதையும் மனுதாரர் பெற தகுதி இல்லை. எனவே இம்மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இந்த இரு மனுக்களும் அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

5. <u>பிரச்சினைக்குத் தீர்வு:</u>

இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனு கோப்பு பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் வழக்கில் வாதியாக உள்ளார். 2012 ல் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதில் இவ்வழக்கு 2017 ல் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போடப்பட்டதில் பல்வேறு இடைநிலை மனுக்கள் மற்றும் அதன் பேரிலான சி.ஆர்.பி.மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதில், மீண்டும் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போடப்பட்டு பின்னிட்டு 2 முறை மனுதாரர் / வாதி இரண்டு முறை வழக்கறிஞரை மாற்றம் செய்துள்ளார். மீண்டும் வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு பல வாய்தாக்கள் வழங்கப்பட்டு வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ளது. பி.வா.சா.1,2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ள நிலையில்

வாதி ஆஜரில்லை என்பதால் குறுக்கு விசாரணை இல்லை என்று இந்நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டுள்ளது. மீண்டும் பி.வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. தற்போது மனுதாரர் /வாதி தரப்பில் பி.வா.சா.2 ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யவும், முடிக்கப்பட்ட பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்தை மறுதிறப்பு செய்யவும் கோரி இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் கடுமையாக ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதி தரப்பில் காலம் கடந்து இம்மனுக்களை தாக்கல் செய்திருப்பினும் அவரது வாதத்தை நிரூபிக்கும் பொருட்டு விசாரணை நீதிமன்றத்தில் தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பதால் இம்மனுக்களை செலவு தொகையுடன் அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்படி பிரச்சினைக்கு தீர்வு காண்கிறது.

**முடிவாக,** மனுதாரர், 4ம் எதிர்மனுதாரருக்கு இ.ம.எண்.12/26 மற்றும் இ.ம.எண்.13/26 ஆகிய இரு மனுக்களிலும் சேர்த்து செலவு தொகையாக ரூ.2000/-ஐ 06.03.2026ம் தேதிக்குள் நேரடியாக செலுத்தும்பட்சத்தில் இம்மனுக்கள் அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில் இம்மனுக்கள் தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 06.03.2026

இந்த பொது உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு ஒலிவடிவில் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026ம் வருடம் மார்ச் மாதம் 02 ம்நாள் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

S EZHIL Digitally signed by S EZHIL Date: 2026.03.02 19:16:42 +0530

முதல் கூடுதல் மாவட்ட நீதிபதி,
ஈரோடு

சாட்சிய சான்றாவணப் பட்டியல்
(..இருதரப்பில் தாக்கல் இல்லை ..)

S EZHIL Digitally signed by S EZHIL Date: 2026.03.02 19:16:48 +0530

மு.கூ.மா.நீ., ஈரோடு.

அசல்/வரைவு பொது உத்தரவு
இ.ம.எண்.12,13/26
அ.வ.எண்.174/2012
நாள் 02.03.2026
மு..கூ.மா.நீ.ம., ஈரோடு.